# 10. திருவேரகம்.

## திருவிராகம்.

### *பண் - கௌசிகம்.*

**ந**ஞ்ச முண்ட கண்டனார் நயந்து தந்த செல்வனே
பஞ்ச பாத கந்தணந்த பண்பி னோர்தொ ழுங்குகா
இஞ்சிசூழ்த டங்கண்மேய வேர கச்சு ரேசனே
தஞ்ச மென்ற டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 1

**வா**சு வன்றி ருக்குசத்து நீழ லில்வ ழுத்திய
ஈச தூஷ ணைக்கிணங்கி னோர்பு ரந்த கித்துளோர்
ஏசு றாத ளித்தசெல்வ வேர கச்சு ரேசனே
தாச னென்ற டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 2

---

*9.* ***கவை*** *= காடு; "கவருங் காடுங் கவையெனலாகும்" என்பது பிங்கலந்தை. இளை = மேகம்;* ***நிகண்டுகள்*** *காண்க.* ***10. உறை*** *= விழுமம்.*

***2. வாசுவன்றிரு*** *= வாசு + வன் + திரு எனப் பிரித்துக் கொள்க. வாசு – "வாஸு" என்னும் வடமொழி விகாரம், விஷ்ணுவுக்கு இஃதொரு பெயர்.* ***நிகண்டு – விச்வமேதிநீ*** *காண்க. வன்திருக்குசம் – வலிய அரசமரம். குசம் – மரம் என்பது* ***சூ – நிகண்டு.*** *"திருமரம்" என்பது பி–****நிகண்டு.***

**பு**ண்ட ரீக லோசனன்பொன் பூத்த வேத னாலமார்
கண்ட னென்னு மூவகைக் கருத்த ருந்தொ ழும்படிக்
கெண்ட கைக்கு ணங்கணீடு மேர கச்சு ரேசனே
தண்ட னிட்ட டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 3

**அ**ங்க ணார்சி காவளத்தி லேறு கின்ற வாண்டவா
மங்கை பாக னார்க்குவேத வாக்குமூலஞ் சொன்னவா
எங்கு லந்த ழைக்கவந்த வேர கச்சு ரேசனே
சங்கை யுற்ற டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 4

**மா**க ரோடு நாகரும் வயங்கு மண்ட லத்தரும்
போகு முன்னெ மக்கடைக்க லம்பு கிற்ச மன்றிசைக்
கேகி டார்மெய் யென்றுரைத்த வேர கச்சு ரேசனே
தாக முற்ற டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 5

**இ**ந்த நாளு னைக்கருத் திருத்தி யென்க ணேயுள
பந்தம் யாவு மற்றிடாத பண்பி னைப்பொ ருந்தினான்
எந்த நாளு நன்குறேனல் லேர கச்சு ரேசனே
தந்தை யென்ற டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 6

**நா**த வொண்சி லம்பலம்ப நாட கம்பு ரிந்திடும்
பாத பங்க யங்களைப் பணிந்து மிந்த நாளையோ
ஏது மின்றி மாய்வனோநல் லேர கச்சு ரேசனே
தாதை யென்ற டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 7

**பூ**மி யந்த ரத்தினும் பொருந்து மேன்மை பூக்கவே
யாமி யக்கை லாயநாதற் கோமு ரைத்த வையநீள்
ஏமு றுந்த வத்த ரேத்து மேர கச்சு ரேசனே
சாமி யென்ற டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 8

**ம**ங்கை நாடுய் பஞ்சவன் மகட்கு மாமு கங்கரந்
தங்க மான நன்முகங் கொடுத்த வாதி யன்பினால்
எங்கு லங்கொ ளீசனேநல் லேர கச்சு ரேசனே
சங்கம் வேட்ட டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 9

***8. யாமியக்கைலாயம்*** = *பொதியமலை. யாமியம் = தெற்கு ;* ***சூ - நிகண்டு*** *நோக்குக.*

**உ**ம்ப ரும்பு கழ்வகுப் புரைத்த வன்றொ டுத்தசீர்
பம்பு மாலை யைத்தினந்தி னம்பு னைந்த பாவகீ
எம்பி ரானெ னக்குணிற்கு மேர கச்சு ரேசனே
சம்பு வென்ற டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே. 10

நந்தன வருடம் பங்குனி மாதம் 18ஆம் தேதி புதவாரம்.